**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in


---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 16.02.2024

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் தென்னையில் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை குறித்த விழிப்புணர்வு பயிற்சி**

கற்பக விருட்சம் என்று அழைக்கப்படும் தென்னையில் பூச்சி மற்றும் நோய் தாக்குதலால் விவசாயிகள் பெரும் பாதிப்பிற்கு உள்ளாகி வருகின்றனர். கோயம்புத்தூர் மாவட்டத்திற்குட்பட்ட பொள்ளாச்சி மற்றும் ஆனைமலை வட்டாரங்களில் வேர் வாடல் நோய் மற்றும் ரூகோஸ் சுருள் வெள்ளை ஈ தாக்குதல் பரவலாக காணப்படுகின்றது. எனவே, விவசாயிகள் மற்றும் தோட்டக்கலை விரிவாக்க அலுவலர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு, ஒரு நாள் விழிப்புணர்வு பயிற்சி மற்றும் வயல் பார்வையிடல் நிகழ்ச்சி ஆனைமலை வட்டம் ஆலங்கடவு கிராமத்தில் திரு. நந்தகோபால் அவர்களின் தோட்டத்தில் நடைபெற்றது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பயிர் பாதுகாப்பு மையம் மற்றும் தென்னை வளர்ச்சி வாரியம், கொச்சி ஆகியோர் இணைந்து இப்பயிற்சியை நடத்தினர். பயிர் பாதுகாப்பு மைய இயக்குனர் முனைவர் மூ.சாந்தி அவர்கள் தென்னையில் பூச்சி மற்றும் நோய் மேலாண்மை குறித்த கையேட்டை வெளியிட்டு பயிற்சியை தலைமையேற்று நடத்தினார். அவர் தன் தலைமையுறையில், இதுவரை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் தென்னையில் பூச்சி மற்றும் நோய் மேலாண்மை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், தற்போது நடைமுறைப் படுத்தப்பட்டுக்கொண்டிருக்கும் ஆராய்ச்சி மற்றும் செயல்விளக்கங்கள், எதிர்கால திட்டங்கள் மற்றும் பல்கலைக்கழகம், தோட்டக்கலைத்துறை மற்றும் தென்னை விவசாயிகள் ஆகியோர் இணைந்து செயல்படுவதன் முக்கியத்துவம் குறித்து விவரித்தார்.

முன்னதாக பயிர் நோயியல் துறை பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் க.அங்கப்பன், அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். கோயம்புத்தூர் தோட்டக்கலை துணை இயக்குனர் திருமதி.புவனேஷ்வரி, அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். பயிர் நோயியல் துறை பேராசிரியர் முனைவர் கா.கார்த்தியேன் மற்றும் பூச்சியியல் துறை இணைப் பேராசிரியர் முனைவர் இரா.அருள்பிரகாஷ் ஆகியோர் தென்னையைத் தாக்கும் பூச்சிகள் மற்றும் நோய்கள், அவற்றின் அறிகுறிகள், பரவும் விதம் மற்றும் ஒருங்கிணைந்த மேலாண்மை முறைகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தனர்.

மேலும் தென்னையில் பூச்சி மற்றும் நோய் மேலாண்மை குறித்த காணொலிக் காட்சிகள் காண்பிக்கப்பட்டது. ஆழியார்நகர் தென்னை ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் முனைவர் ப.லதா மற்றும் முனைவர் இரா.அருள்பிரகாஷ் ஆகியோர் இணைந்து சிறப்பானதொரு கண்காட்சிக்கு ஏற்பாடு செய்திருந்தனர். தொடர்ச்சியாக விஞ்ஞானிகள், தோட்டக்கலை விரிவாக்க அலுவலர்கள் மற்றும் விவசாயிகளுக்கிடையே கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது. முன்னோடி விவசாயிகள் கலந்துகொண்டு தென்னை வேர் வாடல் நோய் குறித்த தங்களுடைய அனுபவங்களை எடுத்துரைத்தனர். உள்ளரங்க பயிற்சிக்குப்பிறகு, செயல்விளக்க தோப்புகளை பார்வையிட்டனர். அங்கு நோய் மற்றும் பூச்சி தாக்குதல் குறித்த விளக்கங்கள் நேரிடையாக அளிக்கப்பட்டது. இப்பயிற்சியில் 50-க்கும் மேற்பட்ட விரிவாக்க அலுவலர்கள் மற்றும் விவசாயிகள் கலந்துகொண்டு பயனடைந்தனர். இறுதியாக முனைவர்.சு.மருதாசலம் அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**